அய்யனடைப்பு ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

ஊ.ம.ந.க.எண் : 100/2024-25 நாள் :

பொருள் : மனைபிரிவு – தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் - அய்யனடைப்பு கிராமம் ∴ ஊராட்சி – சர்வே எண் : 134/3A1B, 6072.00 ச.மீ (1.50 ஏக்கர் பரப்பில் அமையும் குடியிருப்பு மனைபிரிவுக்கு நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கி உத்தரவிடல்.

பார்வை : 1. திருமதி. ஐ. இந்துமதி, என்பவர்களது கடிதம்

2. தூத்துக்குடி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக கடிதம்

3. தலைவர், அய்யனடைப்பு ஊராட்சிக்கு சாலை, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்த தானபத்திரம் எண் : 3822/2024, 3821/2024

4. அரசானை எண் : 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 04.02.2019 மற்றும் அரசாணை எண் : 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் துறை, நாள் : 31.01.2020

உத்தரவு :

பார்வை – 1ல் கண்ட திருமதி. ஐ. இந்துமதி, என்பவர்கள், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், அய்யனடைப்பு ஊராட்சி / கிராமம் சர்வே எண் : 134/3A1B இல் 1.50 ஏக்கர் பரப்பளவு மனையிடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு தூத்துக்குடி மாவடட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் விண்ணப்பித்து.

பார்வை – 3 ன்படி ஊராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலை, பூஸ்திதி ரோடு, உள்ளாட்சி மற்றும் மின்வாரியத்துக்கு ஒதுக்க வேண்டிய இடங்களை, பார்வை, - 4 ல் ஒப்படைக்கப்பட்டதை தொடர்ந்து ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பார்வை – 2இன் படி அறிக்கை உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

பார்வை – 2 இல் காணும் தூத்துக்குடி உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் கடிதத்தின்படி அய்யனடைப்பு ஊராட்சி மற்றும் செயலர் (பொ) அவர்களின் கடிதத்தின்படி அய்யனடைப்பு ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண் : 134/3A1B, 1.50 ஏக்கர் பரப்பளவு மனையிடத்தில் அமைந்துள்ள குடியிருப்பு மனைகளுக்கு நிபந்தனைக்குட்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் எண் : SWP/DTCP/THOTTTHUKUDI /ALAYPOUT NO : 143/2024, PLANNING PERMISSION NO : 72/2024 மற்றும் திட்ட

அனுமதிக்கு கோப்பு எண்: M66931H5/THOOTHUKUDI/TCP/2024 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், அய்யனடைப்பு ஊராட்சி தீர்மான எண் : 100 நாள் : 22.10.2024 இன் படியும் ஊ.ம.அ.எண்: 100/2024 -2025 இன் படி இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு:

அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

R அலுவலக நகல்
28/11/24

தலைவர்
அய்யனடைப்பு ஊராட்சி மன்றம்
அய்யனடைப்பு ஊராட்சி

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்,

பெறுநர் :

திருமதி. ஐ.இந்துமதி,

தூத்துக்குடி

நகல் :

1. உறுப்பினர் செயலர்
   உள்ளூர் திட்டக்குழுமம்
   தூத்துக்குடி
2. சார்பதிவாளர்

   Joint –I, சார்பதிவாளர் அலுவலகம்,

   தூத்துக்குடி
3. இருப்பு கோப்பிற்கு
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)

   தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்,

தமிழ்நாடு அரசு

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை

தூத்துக்குடி

மனைப்பிரிவு நிபந்தனைகள்

ஊ.ம.ந.க.எண் : 100/2024-25 நாள்:

நிபந்தனைகள்

1. அரசாணை எண் : 255 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிதுறை நாள் : 18.08.1997 இன் படி அரசாணையில் கண்ட நிபந்தனைகள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

2. நிலஉரிமை சம்பந்தமாக ஏதேனும் வில்லங்கங்கள் ஏற்பட்டால் எவ்வித நிபந்தனையுமின்றி மனைப்பிரிவு உத்தரவு ரத்து செய்யப்படும்.

3. சாலை மற்றும் ஓடையினை ஆக்கிமைப்பு செய்யக்கூடாது.

4. ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தினை எவ்வித ஆக்கிரமிப்போ இதர வகைக்கோ மனுதாரர் பயன்படுத்தக்கூடாது.

5. மனைப்பிரிவில் கட்டிடங்கள் கட்டும்போது அரசு விதிகளை தவறாது கடைபிடிக்க வேண்டும்

6. சாலை ஓரங்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள எவ்வித தடங்கலும் ஏற்படுத்தக்கூடாது.

7. அனுமதிக்கப்பட்ட மனைபிரிவுளளை தவிர கூடுதலாக மனைபிரிவோ மாற்றமோ ஏற்படுத்தக்கூடாது.

8. சாலைகள் அனைத்தும் பொதுச்சாலையாக பயன்படுத்தப்பட வேண்டும் அருகில் உள்ள நில உரிமைதாரர்கள் இவ்வழியாக செல்ல தடை ஏற்படுத்தக்கூடாது.

9. மனைப்பிரிவில் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட தெருக்களில் 100 அடிக்கு ஒரு மின்கம்பம் மனுதாரரின் செலவில் அமைப்பதற்கு மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதி இருப்பின் தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

11. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனை இருப்பின் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்.

12. கோவில் , தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் இருப்பின் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

13. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின் படி உள்ளாட்சி அலுவலர் வழங்கிய சான்றினை ஏற்று நில உரிமை குறித்து

பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைபிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

14. மேலும் நகர் ஊரமைப்புத்துறை இணை இயக்குநரின் நிபந்தனைகளை தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.

15. மேற்கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்க தவறும் பட்சத்தில் தங்களது அனுமதி எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படுவதுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

R அதிகாரி கையொப்பம்

28/11/24

தலைவர்

அமைவனைப்பு ஊராட்சி

தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்,